சுருக்கம்

பொதுப்பணிகள்– தமிழ்நாடு அமைச்சுப்பணி– விருதுநகர் மாவட்ட வருவாய் அலகு– திரு.வே.சரவணக்குமார், த/பெ காலஞ்சென்ற திரு.தி.வேலுசாமி– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது– பணியை வரன்முறை செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்:28

நாள்: 28.03.2022
திருவள்ளுவராண்டு 2053,
பிலவ வருடம், பங்குனி–14

படிக்கப்பட்டது:

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆகு4/43317/2012, நாள் 09.01.2020.

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி 02.07.2005 அன்று பணியிடையே காலமான திரு.தி.வேலுசாமி என்பவரின் மனைவி திருமதி சங்கரம்மாள் என்பவர் தனது மகன் திரு.வே.சரவணக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் 05.06.2006 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், இதனைத் தொடர்ந்து, காலஞ்சென்ற திரு.வேலுச்சாமி என்பவரின் மகன் திரு.வே.சரவணக்குமார் என்பவரும் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூன்றாண்டு காலக்கெடுவிற்குள் 05.06.2006 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், இதனைத் தொடர்ந்து தனியர் திரு.வே.சரவணக்குமார் என்பவருக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 02.01.2012 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இந்நேர்வில், தனியரின் பணிநியமனத்தை, பணியேற்ற நாளான 02.01.2012 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினை பெற்றுத் தருமாறு விருதுநகர் மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார் என்றும், தெரிவித்துள்ளார்.

2. மேலும், காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.வேலுச்சாமி என்பவர் இறந்த தேதியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.வே.சரவணக்குமார் என்பவர் 11 வயது நிரம்பப் பெற்றுள்ளார் என்றும், அரசுக்

// த.பி.பா //

கடித (நிலை) எண்.86/க்யூ–1/2010–2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.05.2010–ல், பத்தி 5(iii)–ல், காலஞ்சென்ற அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பதாரர் விண்ணப்பம் அளிக்கும் நாளினைக் கொண்டே வயது மற்றும் கல்வி தகுதிகள் நிர்ணயிக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், இந்நேர்வில், திருமதி வே.சங்கரம்மாள் என்பவர் தனது மகனுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி மனு அளித்த நாளில் (05.06.2006) அவரது வயது 12 ஆண்டுகள், 09 மாதங்கள், 09 நாட்கள் நிறைவடைந்தவராகவும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர் (மார்ச் 2008–ல் தேர்ச்சி பெற்றுள்ளார்) என்றும், தனியரது தந்தையான திரு.வேலுச்சாமி என்பவர் காலமானபின்பு, தனியரது குடும்பத்தில் பொருளீட்டும் நபர் எவரும் இல்லாத நிலை இருந்து வந்ததாலும், அதனால் தனியரது குடும்பம் வறிய நிலையில் இருந்ததாலும், குடும்பத்தின் வாரிசுகளில் மூத்தவரான தனியர் பள்ளிப்படிப்பினை தொடர்ந்து கொண்டு இருந்ததாலும், காலமான அரசு ஊழியரின் பணியினை அங்கீகரிக்கும் பொருட்டு, அக்குடும்பத்திற்கு அரசினால் வழங்கக்கூடிய வாரிசு வேலையினை, தனியரது குடும்ப சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு, தனியருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும், தனியர் அரசுப் பணியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 02.01.2012 அன்று தனியர் 18 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

3. அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 10.12.2014 பத்தி 6–ன்படி, 23.08.2005 முதல் 04.05.2010 முடிய விண்ணப்பம் அளித்தவர்கள் குறும வயதுத் தகுதி தவிர ஏனைய பிற தகுதிகள் பணிகோரிய விண்ணப்ப நாளிலும், குறும வயதுத் தகுதி மட்டும் (18 ஆண்டுகள் நிறைவு) பணிநியமனம் நாளிலும் நிறைவு செய்யும் பட்சத்தில் தகுதியானதாக கருதப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், 02.01.2012–ல் தனியருக்கு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும், தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, விதி 20(6)(b)க்கு, விலக்களித்து, தனியருக்கு வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறைப்படுத்தி, தனியர் திரு.வே.சரவணக்குமார் என்பவர் பணியேற்ற நாளான 02.01.2012 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினைப் பெற்றுத் தருமாறு அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை நன்கு ஆய்வு செய்யப்பட்டது. விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், மாவட்ட வழங்கல் அலுவலகத்தில், இளநிலை உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே காலமான திரு.வேலுச்சாமி என்பவரின் மனைவி திருமதி.சங்கரம்மாள் என்பவர் தனது மகன் திரு.வே.சரவணக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்த 05.06.2006 அன்று தனியர் போதிய வயது மற்றும் கல்வித் தகுதியை நிறைவு செய்யாததால், தனியர் பொருட்டு, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ன் பிரிவு 58–இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 12(bbb) [தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b)]–ஐயும், பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து வழங்க ஏதுவாக அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 23(a)(ii) [தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2)]–ஐயும் தளர்வு செய்தும், தனியர் திரு.வே.சரவணக்குமார் என்பவரது

பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாளான 02.01.2012 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறையின் அ.சா.எண்.6030/க்யூ–2/2020–2, நாள் 04.07.2020 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.29341/ஜி2/2021–1, நாள் 08.10.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், விருதுநகர்.
திரு.வே.சரவணக்குமார், இளநிலை உதவியாளர்
(மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மூலமாக)
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28/3/2022
பிரிவு அலுவலர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின்
செயல்முறை ஆணைகள்,
பிறப்பிப்பவர்: திரு.ஆ.காளிமுத்து,எம்.ஏ.,

ந.க.அ6/15696/2022 நாள்:20 .04.2022.

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் - விருதுநகர் மாவட்ட வருவாய் அலகு - இளநிலை ஆய்வாளர் - திரு.வேலுச்சாமி- பணியில் இருக்கும் போது கடந்த 02.07.2005 அன்று காலமானது - அன்னார் மகன் திரு.வே.சரவணக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணியில் சேர்ந்த 02.01.2012 மு.ப. முதல் பணி வரன்முறை செய்ய அரசாணை வெளியிடப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை : விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.அ6/த.ப.169/2006,நாள்:22.12.2011
விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எண் ந.க.அ6/த.ப.169 /2006, நாள்:23.02.2018 மற்றும் 12.05.2018.
அரசாணை (3டி) எண்.:28 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பணிகள் அலகு, பணி 9(2) பிரிவு, நாள். 28.03.2022.

((()))

ஆணை :-

விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், மாவட்ட வழங்கல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே காலமான திரு.வேலுச்சாமி என்பவரின் மகன் திரு.வே.சரவணக்குமார் என்பவருக்கு, பார்வை 1-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில், விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டது.

2) அதனடிப்படையில், 02.01.2012 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.வே.சரவணக்குமார் என்பவர், கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்த 05.06.2006 அன்று தனியர் போதிய வயது மற்றும் கல்வித்தகுதியை நிறைவு செய்யாததால், விதித்தளர்வு செய்து, தனியரது பணியை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 02.01.2012 மு.ப. முதல் பணிவரன்முறை செய்து ஆணை பெற்றுத்தரக் கேட்டு பார்வை 2-இல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தின் வழி முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது.

3) பார்வை 3-இல் கண்டுள்ள அரசாணையில், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020-க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இன் பிரிவு 58-இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 23(a)(ii) (தற்போதைய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2)-ஐயும் தளர்வு செய்தும், தனியர் திரு.வே.சரவணக்குமார் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாளான 02.01.2012 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

த.பி.பா.

4) அதனடிப்படையில், திரு.வே.சரவணக்குமார் என்பவரின் பணி, இளநிலை வருவாய் உதவியாளர் நிலையில் அவர் பணியேற்பு செய்த நாளான 02.01.2012 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(ஒம்/-)ஆ.காளிமுத்து,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)
விருதுநகர்.

/ஆணைப்படி/

21/04/2022

அலுவலக மேலாளர்(பொது)

21/4/22

பெறுநர்
சம்பந்தப்பட்ட நபர்
நகல்: வருவாய் வட்டாட்சியர்,
இராஜபாளையம்.
நகல் : அ6-இருப்பு கோப்பிற்கு.